பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 25 ஞாயிற்றுக்கிழமை 08.06.2025 கதிர் 211

**இனி இது ரகசியம் அல்ல!**

வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைகளில்தமிழ்கட்சிகளைநேருக்கு நேர் மல்லுக்கட்ட விட்டு ஒதுங்கிக் கொண்டுவிட்டது தேசிய மக்கள் சக்தி. இங்குள்ள ☞2

## கொழும்பு மாநகர சபையில் ஆளும்தரப்பே வெற்றி பெறும்

### அமைச்சர் சுனில் வட்டகல திட்டவட்டம்

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு ஆளுங்கட்சிக்கு 11 உறுப்பினர்கள்மாத்திரமேதேவையாகும். ஆனால் 11க்கும் அதிகமான சுயேச்சை உறுப்பினர்கள் அவர்களது ஆதரவை எமக்குவழங்கியுள்ளனர். எனவேநாளை வாக்கெடுப்பு நடத்தப்பட்டாலும் தேசிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளரே வெற்றி பெறுவார் என பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக முன்னணியில் போட்டியிட்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலில்வெற்றிபெற்றவேட்பாளர்நேற்று தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாக உறுதியளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

கொழும்பில் தேசிய மக்கள் சக்தியிலிருந்து 48 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஆட்சியமைப்பதற்கு இன்னும் ☞2

## தாய் நாட்டைக் காட்டிக்கொடுத்தீர்களா? ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. கொந்தளிப்பு

இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் ஆளும்தரப்பு இன்னும் நாடாளுமன்றத்துக்கோ நாட்டுக்கோ தெரியப்படுத்தவில்லை. அவ்வாறெனில் ஆளும்தரப்புசெய்யக்கூடாதஒன்றைசெய்துள்ளதா? தெரிந்தோ தெரியாமலோ எமது தாய் நாடு காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா கேள்வியெழுப்பினார்.

கொழும்பில்நேற்றுநடைபெற்றசெய்தியாளர்கள் சந்திப்பில் இதனைக் கேட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

இந்தியாவுடன் எத்தனை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்கையெழுத்திடப்பட்டுள்ளன? அவற்றின் உள்ளடக்கங்கள் எவ்வாறானவை? அவற்றுக்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கப் ☞6

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடர் ஜீன் 16 ஆரம்பம்

ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள்பேரவையின் 59ஆவது கூட்டத்தொடர் ஜீன் 16 ஆரம்பமாகி, ஜூலை 9 வரை நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் வோல்கர் டேர்க்கின் ☞2

## 323 கொள்கலன்களில் மட்டும் சோதனை தவிர்த்தது எப்படி?

### தயாசிறி எம்.பி. கேள்வி

ஆயிரக்கணக்கான கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியிருந்த நிலையில், இந்த 323 கொள்கலன்கள் மாத்திரம் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவிக்கப்பட்டது? தனது ☞6

# வடக்கு, கிழக்கில் எந்தக் கட்சிக்கும் தேசிய மக்கள் சக்தி ஆதரவு இல்லை

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவிப்பு

வடக்கு,கிழக்கில்உள்ளஉள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கு எந்தவொரு தமிழ்க் கட்சிக்கும் தேசியமக்கள்சக்திஆதரவளிக்காது என்று அமைச்சர் விமல் ரத்நாயக்க தெரிவித்தார். தமிழ் அரசுக் கட்சிக்கு தமது கட்சி ஆதரவு வழங்கும் என்று வெளியான செய்திகளையும் அவர் மறுத்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கத் தேசிய மக்கள் சக்தி ஆதரவளிக்கவுள்ளது என்று சில ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தியை அடியோடு நிராகரிக்கின்றோம் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். “வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கத் தமிழ் அரசுக் கட்சிக்கோ அல்லது வேறு எந்தக் கட்சிகுமோ தேசிய மக்கள் சக்தி ஆதரவு வழங்காது. மக்கள் வழங்கிய ஆணையை மீறிச் ☞2

## பொதுமன்னிப்பில் முறைகேடு; விசாரிக்க சிஐடியில் முறையீடு

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பில் பெரும் முறைகேடு இடம்பெற்றிருப்பதாக குறிப்பிடப்படுவது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் (சிஐடி) முறைப்பாடு செய்துள்ளது.

அத்துடன் எதிர்வரும்நாட்களில் ☞2

## வடக்கு கிழக்கு அபிவிருத்தியில் இந்திய ஆளும்தரப்பு ஆர்வம்

### அந்நாட்டுத் தூதுவர் சுமந்திரனிடம் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுப்பதற்குத்தாம்மிகுந்தஆர்வம் கொண்டிருப்பதாக இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின்பதில்பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனிடம் தெரிவித்துள்ள இந்திய உயர் ஆணையர் சந்தோஷ் ஜா, தமிழ்த்தேசியகட்சிகளின்சமகாலஅரசியல் நகர்வுகள் தொடர்பில் கேட்டறிந்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர் ஆணையர் சந்தோஷ் ஜாவுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ☞2

## இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பது அவசியம்

### ஆளும்தரப்பிடம் தூதுவர் சந்தோஷ் ஜா வலியுறுத்து

இந்தியாவிலிருந்து மீண்டும் நாடு திரும்பும் அகதிகளுக்கான இருப்பிட மற்றும் வாழ்வாதார வசதிகளை செய்து கொடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து ஆளும்தரப்புடன்டன் கலந்துரையாடியிருப்பதாகஇலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர் ஆணையர் சந்தோஷ் ஜாவுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது ☞2 அண்மையில்

## இலங்கை தொழிலாளர்களின் உரிமைகள் நாணய நிதிய நலனுக்கு காட்டிக்கொடுப்பு

### சட்டத் திருத்தம் தொடர்பில் முன்னிலை சோசலிசக் கட்சி காட்டம்

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தொழிலாளர் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ளதயாராகிவருகிறது. இந்த திருத்தமானது நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளைச் சர்வதேச நாணய நிதியத்தின் நலன்களுக்குக் காட்டிக்கொடுப்பதற்கானமுயற்சியாகும் என முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.


நுகேகொடையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

தேசிய மக்கள் சக்தி ☞2

## சிந்துப்பாத்தி புதைகுழியிலிருந்து 19 பேரின் எலும்பு எச்சங்கள் மீட்பு

### முதற்கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவு

யாழ்- அரியாலை, சித்திப்பாத்தி இந்துமயானத்தில் காணப்பட்ட மனிதப்புதைகுழி ஆரம்பகட்ட பரீட்ச்சாத்த அகழ்வின் போது இருந்து இன்றுடன் 19 மனித எலும்புக்கூடுகள் அடையாளம்!



அடையாளம் காணப்பட்ட 19 எலும்புக்கூடுகளும் புதைகுழியில் இருந்து வெளியே எடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்டுள்ள19எலும்புக்கூடுகளும் சட்டவைத்திய அதிகாரி பிரணவனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் சட்ட வைத்திய அதிகாரி குறித்த எலும்புக்கூடுகளை நீதிமன்றின் பாதுகாப்பில் வைப்பிலிடுவார் எனவும் சட்டத்தரணிரணித்தாதெரிவித்தார். ☞2

### ஒப்பந்தம் செய்தவைகள் தவிர

## அனைத்துச் சபைகளிலும் தமிழ் அரசு வேட்பாளர்களை முன்னிறுத்தியே தீரும்

உள்ளூராட்சி மன்றங்களில்ஆட்சியமைக்கும்போது நிர்வாகங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சபைகள் தவிர்ந்த ஏனைய அனைத்துச் சபைகளிலும் மேயர், தலைவர் மற்றும் தவிசாளர் பதவிகளுக்குத் தமது வேட்பாளர்களை முன்மொழிவதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களில்ஆட்சியமைப்பதுகுறித்து ஆராயும் நோக்கில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 - 9.30 மணிவரை நிகழ்நிலைமுறைமையில் ☞6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

எந்தச் சபைகளிலும் எந்தக் கட்சியையும் ஆதரிக்கப்போவதில்லை என்று ஆளும்தரப்பு உறுதியாகத் தெரிவித்துள்ளது. என்பிபியால் வடக்கின் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள அமைச்சரான பிமல் ரத்நாயக்க இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் தமிழ்க் கட்சிகளுக்குக் கிடைத்த மக்கள் ஆணைக்கு தமிழ் காங்கிரஸ் புது விளக்கம் வழங்கியபடி தமிழ் அரசுக் கட்சியுடன் மல்லுக்கட்டத் தயாராக இருக்கும்போது, அதில் தாம் தலையிடுவதைவிட, இந்தக் கட்சிகளை நேரடியாகமோதவிட்டு அவர்களின் சீத்துவத்தை தமிழ் மக்களிடம் அம்பலப்படுத்துவதே தமக்கு அரசியல் ஆதாயம் என்று தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துவிட்டது. இவர்களை அடிபட விட்டு வேடிக்கை பார்ப்பது மட்டுமே தமது வேலை என்கிற நிலைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள்.

இனியென்ன, களத்தில் ஓர் அரசியல் பலப்பரீட்சை இடம்பெறும். ஒற்றுமை ஒற்றுமை என்று கொஞ்ச நாட்களாகவே காட்டுக் கத்தல் கத்தி வந்த தமிழ் காங்கிரஸும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியும் தமிழ் அரசுக் கட்சியுடன் குஸ்தியில் இறங்கும். தாங்கள் ஒப்பந்தம் செய்துகொண்ட சபைகளைத் தவிர்த்து ஏனைய சபைகளில் எல்லாம் தமிழ் அரசுக் கட்சி தனது வேட்பாளர்களைக் களமிறக்கி கோதாவில் இறங்குவது என்று வெள்ளிக்கிழமை மெய்நிகர் வழியில் இடம்பெற்ற தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு முடிவு செய்துள்ளது. எனவே அடிபாடு நிச்சயம்.

இந்தக் கோதாவில் இருந்து என்பிபி, 'வோக்ஓவர்' கொடுத்துவிட்டதால் இனி மல்லுக்கட்டல் தமிழ்க் கட்சிகளுக்கும் எஞ்சியிருக்கும் ஓரிரு சுயேச்சைகளுக்கும் இடையில்தான். ஏற்கனவே சுயேச்சைகளுடன் பேரம் பேசல்கள் தீவிரமாக இருந்தன. இனி இன்னும் தீவிரமாகும். இரு தரப்புக்களுமே அவர்களைத் தம் பக்கம் இழுப்பதில் கடும் முயற்சியைச் செய்யும்.

என்பிபி ஒதுங்கிவிட்டால், யார் அதிகாரத்தைப் பிடிப்பது என்பதைத் தீர்மானிப்பது அதிகமான சபைகளில் இனி ஈபிடிபியின் கைகளில்தான் இருக்கும். ஆக மொத்தத்தில் தியாகி யார் துரோகி யார் என்பதை ஈபிடிபி தான் தீர்மானிக்கும். ஈபிடிபி ஆதரிப்பவர் துரோகி, ஆதரிக்காமல் விட்டவர் தியாகி என்பதுதானே இங்கே வரையறை. இந்த நிலமைக்குக் கொண்டு வந்து விட்டவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். இல்லையேல் மக்கள் அடுத்த தேர்தலில் பதில் சொல்வார்கள்..

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## வடக்கு, கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படும் எண்ணம் எமது கட்சிக்கு இல்லை. வடக்கு, கிழக்கில் எந்தச் சபைகளில் தமிழ் அரசுக் கட்சி அதிக ஆசனங்களுடன் இருக்கின்றதோ அந்தச் சபைகளில் தமிழ அரசுக் கட்சி ஆட்சியமைக்க முடியும். மற்றைய சபைகளில் எந்தக் கட்சி அதிக ஆசனங்களுடன் இருக்கின்றதோ அந்தக் கட்சி ஆட்சியமைக்க முடியும். இதில் தேசிய மக்கள் சக்தி தலையிடாது" - என்றார்.

## கொழும்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு 11 உறுப்பினர்கள் மாத்திரமே தேவை. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து 29 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்கள் ஆட்சியமைக்க வேண்டுமெனில் இன்னும் 30 உறுப்பினர்களின் ஆதரவு தேவையாகும்.

11க்கும் அதிகமான சுயேச்சை உறுப்பினர்களின் ஆதரவு எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்காக உறுப்பினர்களின் எண்ணிக்கையை தற்போது தேசிய மக்கள் சக்தி பூர்த்தி செய்துள்ளது. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியிடம் தற்போது எத்தனை உறுப்பினர்கள் இருக்கின்றனர் என்பதையோ, யார் மேயர் வேட்பாளர் என்பதையோ கூற முடியாது அக்கட்சியினர் தடுமாறுகின்றனர்.

ஆனால் நாம் தேர்தல் பிரசாரத்துக்கு முன்னதாகவே எமது மேயர், பிரதி மேயரையும் அறிவித்திருக்கின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளர் தனது தொகுதியில் தோல்வியடைந்துள்ளார். எனவே தற்போது ரீஸா சரூக் என்பவர் மேயர் வேட்பாளர் என தெரிவிக்கப்படுகிறது. இவர் தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்கு உள்ளான ஒருவரையா நீங்கள் மேயர் வேட்பாளராக்குகின்றீர்கள் என ஐக்கிய மக்கள் சக்தியிடம் கேள்வியெழுப்புகின்றோம். ஏனைய மாநகரசபைகளைப் போன்றல்லாமல் கொழும்பு மாநகரசபை பல்வேறு துறைகளில் மத்திய ஆளும்தரப்புடன் நேரடி தொடர்புகளைக் கொண்டுள்ளது. அவ்வாறிருக்கையில் மாநகரசபை அதிகாரமும் ஆளுங்கட்சியிடம் காணப்பட்டால் மாத்திரமே வேலைத்திட்டங்களை நெருக்கடிகள் இன்றி முன்னெடுத்துச் செல்ல முடியும். மக்கள் இதனையே எதிர்பார்க்கின்றனர். எமக்கு 10 நாட்கள் கால அவகாசம் தேவையற்றது. நாளை வாக்கெடுப்பினை நடத்தினாலும் நாம் வெற்றி பெறுவோம். கொழும்பு மாநகர மேயர் ராய் கெலி பல்தசார் என்பது நிச்சயிக்கப்பட்டு விட்டது என்றார்.

## ஐ.நா. மனித ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகளாவிய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான அறிக்கையுடன் ஜெனீவாவில் ஆரம்பமாகவிருக்கும் இக்கூட்டத்தொடரின் விடயதான மற்றும் நேர ஒழுங்கு அட்டவணையில் இலங்கையுடன் தொடர்புடைய விடயங்கள் உள்வாங்கப்படவில்லை.

அதேவேளை இக்கூட்டத் தொடருக்கு மத்தியில் எதிர்வரும் 23 ஆம் திகதி மனித உரிமைகள் உயர் ஆணையர் நாட்டுக்கு வருகைதர உத்தேசித்திருப்பதுடன், இவ்வருகை தொடர்பில் உள்ளக மற்றும் சர்வதேச தரப்புக்கள் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரிலேயே இலங்கை தொடர்பில் உயர்ஸ்தானிகரின் வாய்மொழிமூல அறிக்கை வெளியிடப்படவிருப்பதுடன், புதிய தீர்மானமொன்றைக் கொண்டுவருவது குறித்தும் ஆராயப்படும்.

## சிந்துப்பாத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் மனிதப்புதைகுழியின் பரீட்சார்த்த அகழ்வு யாழ்ப்பாணம் நீதவான் நீதமன்ற நீதிபதி ஆனந்தராஜாவின் மேற்பார்வையில் இன்று முன்னெடுக்கப்பட்டது. நேற்று தற்காலிகமாக நிறைவுறுத்தப்பட்டது. புதைகுழி அகழ்வுப்பணிகளை மேலும் 45 நாட்களுக்கு நீடிப்பதற்கு நீதிவான் ஏற்கனவே கட்டளையிட்டுள்ளார்.

45 நாட்களுக்கான அகழ்வுப்பணிக்கான பாதீடு இன்று சட்டவைத்திய அதிகாரியால் யாழ் நீதிவான் மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேவையான நிதி உதவி கிடைத்ததும் அகழ்வுப் பணிகள் மீண்டும் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்காக ஜூன் 26 தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. குறித்த நாளுக்குள் நிதி ஒதுக்கீடு கிடைத்தால் பணிகள் தொடங்கும்.

## இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு தொழிலாளர் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ளத் தயாராகி வருகிறது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. இந்த திடீர் அமைச்சரவை அங்கீகாரத்துடன் ஆளும்தரப்பு செய்யவிருக்கும் திருத்தத்தைப் பார்க்கும்போது, இது இந்த ஆளும்தரப்பு எதிர்பார்க்கும் புதிய திருத்தம் அல்ல. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் கொண்டுவரப்பட்டதாகவே தெரிகிறது.

தொழில் அமைச்சராக இருந்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, அந்த நேரத்தில் ஒரு தொழிலாளர் சட்டத்தைக் கொண்டு வந்தார். இலங்கையில் முழு தொழிலாளர் சட்டத்தையும் தலைகீழாக மாற்றி, விதிகள் மற்றும் விதிமுறைகளை தளர்த்த அவரால் நடவடிக்கைகளெடுக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும் இதற்கு சமூகத்தில் எழுந்த எதிர்ப்பினால் அந்த ஆளும்தரப்பால் அதை நிறைவேற்ற முடியவில்லை. ஆட்சியமைக்க முன்னர் இந்தச் சட்டத்தை எதிர்த்த ஆளும்தரப்பு தற்போது அதை நிறைவேற்ற முயற்சிக்கிறது.

ஆளும்தரப்பு இந்த நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளை சர்வதேச நாணய நிதியத்தின் நலன்களுக்குக் காட்டிக் கொடுக்கத் தயாராகி வருகிறது. தொழிலாளர் சட்டத்தின் அரசியல் நோக்கம் 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன் தொடர்புடையது. அதற்கு அப்பால், இந்தத் திருத்தம் சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடுகளுடன் தொடர்புடையது.

2022ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடி சாதாரண மக்களால் ஏற்படவில்லை என்பதை நாம் அறிவோம். இந்த நாட்டின் தொழிலதிபர்களும் அரசியல் ஆட்சியும் அந்த நெருக்கடிக்குக் காரணம். நாட்டிற்குள் வர வேண்டிய பில்லியன் கணக்கான டொலர்களை அவர்கள் மோசடியாக வெளிநாடுகளில் வைத்திருந்தனர். செலுத்த வேண்டிய பில்லியன் கணக்கான வரிகளை செலுத்துவதையும் அவர்கள் தவிர்த்துவிட்டனர்.

கோடிக்கணக்கான பெரிய அளவிலான ஊழல், மோசடிகள் இடம்பெற்றன. இதுவே பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாகும். ஆனால் நாட்டு மக்கள் தங்கள் வரிகளை சரியான நேரத்தில் செலுத்தினர். அவர்கள் தங்கள் வேலைகளை முறையாகச் செய்தார்கள். அவ்வாறிருந்தும் மக்களின் வருமானம் எந்த வகையிலும் அதிகரிக்கவில்லை. மாறாக வாழ்க்கை செலவு மாத்திரமே அதிகரித்துச் செல்கிறது. இந்நிலையில் சாதாரண தொழிலாளர் வர்க்கத்தை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையிலேயே இந்த புதிய சட்டமும் அமைந்துள்ளது என்றார்.

## இந்தியாவிலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்திலுள்ள அகதி முகாமிலிருந்து நாடு திரும்பிய 75 வயதுடைய நபரொருவர் பலாலி விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு, பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சம்பவம் குறித்து உயர் ஆணையர் சந்தோஷ் ஜாவிடம் சுமந்திரன் எடுத்துரைத்தார்.

அது மாத்திரமன்றி இந்திய அகதி முகாம்களில் உள்ள சுமார் 10,000 இலங்கை அகதிகள் மீண்டும் நாடு திரும்புவதற்கு விண்ணப்பித்திருப்பது பற்றியும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதனை செவிமடுத்த உயர் ஆணையர் சந்தோஷ் ஜா, மீண்டும் நாடு திரும்பும் அகதிகளுக்கு அவசியமான இருப்பிட மற்றும் வாழ்வாதார உதவிகளை அரசாங்கம் செய்துகொடுக்கவேண்டும் எனவும், இதுபற்றி ஆளும்தரப்புடன் கலந்துரையாடியிருப்பதாகவும் தெரிவித்தார்.

## வடக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஆணையரகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது வட, கிழக்கு மாகாணங்களில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் அவற்றின் நிலவரம் என்பன தொடர்பில் கேட்டறிந்த உயர் ஆணையர், தாம் அம்மாகாணங்களில் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். அதுமாத்திரமன்றி அவ்வாறான திட்டங்கள் குறித்த முன்மொழிவுகள் இருப்பின், அதனைத் தம்மிடம் வழங்குமாறும், அதுபற்றி ஆளும்தரப்புடன் பேசுவதற்குத் தாம் தயாராக இருக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னரான தமிழ்க் கட்சிகளின் அரசியல் நகர்வுகள் தொடர்பில் கேள்வியெழுப்பிய உயர் ஆணையருக்குப் பதிலளித்த சுமந்திரன், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் அதிகூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சி ஆட்சியமைப்பதற்கு ஏனைய கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்ற கோட்பாட்டைத் தமது கட்சி முன்வைத்திருக்கிறது எனவும், இருப்பினும் அதற்கு முரணாக இரு கட்சிகள் கூட்டணி அமைத்து தம்வசமே அதிக ஆசனங்கள் இருப்பதுபோல் காண்பித்துக்கொள்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒரே கொள்கையையே கொண்டிருப்பதாகவும், அணுகுமுறைகளே மாறுபட்டவையாகக் காணப்படுவதாகவும் தெரிவித்த சுமந்திரன், இருப்பினும் அதனை கஜேந்திரகுமார் மறுப்பதற்கான காரணம் தனக்குத் தெரியவில்லை எனவும் விசனம் வெளியிட்டார்.

அதேவேளை புதிய அரசமைப்பு உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில் 2015 - 2019ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் தாம் தயாரித்த அரசமைப்பு வரைபு சிறந்த பல கூறுகளைக் கொண்டிருப்பதாக உயர் ஆணையர் சந்தோஷ் ஜாவிடம் எடுத்துரைத்த சுமந்திரன், அதிலுள்ள குறைபாடுகள் பற்றி சகலரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி திருத்தங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக, அதனை முற்றாக நிராகரிக்கவேண்டும் என கஜேந்திரகுமார் கூறிவருவது ஏற்புடையதன்று என்றும் தெரிவித்தார்.

## பொதுமன்னிப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டு, பொறுப்பான அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் நிதி மோசடி தொடர்பாக சிறையிடப்பட்ட நபரான அதுல திலகரத்ன என்ற நபரின் பெயர், ஜனாதிபதியால் பொது மன்னிப்புக்காக அனுமதிக்கப்பட்ட 388 பெயர் பட்டியல்ல சேர்க்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி செயலக ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2025 வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அதுல திலகரத்ன என்பவர் விடுவிக்கப்பட்டார் எனவும், இந்த சம்பவத்தின் பின்னணியில் கடுமையான முறைகேடு இருப்பதாகவும் வெளியான செய்தி குறித்து ஜனாதிபதி செயலகம் கவனமெடுத்துள்ளது.

அரசமைப்பின் 34 (1) பிரிவின் பிரகாரம், கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. அதன்படி, சிறைச்சாலை அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கைதிகளின் பட்டியல் நீதி அமைச்சுக்கு அனுப்பப்படும். இந்தப் பட்டியல் நீதி அமைச்சரினால் பரிசீலிக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்படுகிறது. அதன்படி, ஜனாதிபதியின் அனுமதியுடன், குறித்த கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்.

எவ்வாறாயினும், மேற்குறித்த சம்பவத்திற்கு அமைவாக 2025-05-06 திகதியிடப்பட்ட மற்றும் 06மி01-05-12-2025 இலக்கத்தில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த பொது மன்னிப்பு கிடைக்க வேண்டியவர்களின் பெயர் பட்டியலில் 388 கைதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

மேலும் அநுராதபுரம் சிறைச்சாலையில் நிதி மோசடி தொடர்பாக சிறையிடப்பட்ட நபரின் பெயர் அந்தப் பட்டியலில் எங்கும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அதாவது, ஜனாதிபதியால் பொது மன்னிப்புக்காக அனுமதிக்கப்பட்ட 388 பெயர்களில் அந்த நபரின் பெயர் சேர்க்கப்படவில்லை.

இந்த சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்று (06) 'ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் சிறைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக' என்ற தலைப்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் இது தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டு, பொறுப்பான அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றுள்ளது.

# மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுகள் பாதுகாப்பாக சென்றடைகிறதா என கலந்தாய்வு.

ஆளும்தரப்பினால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற சமைத்த உணவுகள் உரிய முறையில் பாதுகாப்பாக சென்றடைகின்றதா எனும் கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை பிற்பகல் மட்டக்களப்பில் இடம்பெற்றது

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் முரளீஸ்வரன் தலைமையில் பிராந்தியசுகாதார சேவை அலுவலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்புகல்விவளையத்திற்குட்பட்ட 3பாடசாலைகளில் அண்மையில் உணவு ஒவ்வாமையினால் 70 பாடசாலை மாணவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதைத்தொடர்ந்துஇமட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி இ.உதயகுமாரின் ஏற்பாட்டில் இந்த விசேட கலந்து ரையாடல் இடம்பெற்றது. இதன்போது பாடசாலைகளுக்கு உணவுவழங்குதலில்பிளாஸ்டிக்முற்றாகதடைசெய்யப்பட்டுள்ளதுடன் பாடசாலைகளுக்கு அண்மித்த பகுதிகளில் உள்ளவர்களுக்கு மாத்திரமே உணவு வழங்க ஒப்பந்தம் செய்யப்படவேண்டும் எனவும் உணவு தயாரித்து இரண்டு மணித்தியாலங்களுக்குள் பாடசாலைகளுக்கு வழங்க முன் அதனை பாடசாலை உணவுக் குழு கண்காணிக்க வேண்டும் எனவும் இதனை பொதுச் சுகாதார பரிசோதவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் ஒருவர் ஒரு பாடசாலைக்கு மாத்திரமே உணவு வழங்குதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன்200மாணவர்களுக்கு மாத்திரமே அவை வழங்க வேண்டும் எனவும் இந்தக் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு வலய கல்வி பணிப்பாளர் திருமதிஷாமினிரவிக்குமார்பொதுசுகாதாரவைத்திய அதிகாரிகள்மட்டக்களப்புகல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் உணவு வழங்குனர்கள் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் சுகாதார சேவை திணைக்கள உயர் அதிகாரிகள் என பலரும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

## கூட்டுறவுத் துறையை நெறிப்படுத்த விரைவிலேயே புதிய சட்டங்கள்

கூட்டுறவு வங்கிக் கட்டமைப்பு உள்ளிட்ட கூட்டுறவுத் துறைய நெறிமுறைப்படுத்துவதற்குப் புதிய சட்டங்களை விரைவில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். அதிக இலாபம் ஈட்டும் நோக்கில் உப்பின் விலையை நியாயமற்ற முறையில் அதிகரிப்பதற்கு எவராவது முயற்சித்தால், எதிர்காலத்தில் உப்பிற்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டுறவு வங்கிகள் பலவற்றில் நிதி மோசடிகள் உள்ளிட்ட முறைகேடுகள் இடம்பெறுவதாகத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்திருப்பதால், அவற்றைசரியான முறையில் நெறிமுறைப்படுத்தி உரிய முறையில் அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு புதிய சட்டங்களைக் கொண்டுவர வேண்டியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற நிலமையால் பொதுமக்களின் நன்மைக்காக அமைக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகள் படிப்படியாக மக்களிடமிருந்து விலகிச் சென்று வருவதாகவும், ஒரு குறிப்பிட்ட குழுவினர் மட்டுமே அவற்றால் பயனடைந்து வருகின்றனர் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தற்போது பொதுமக்களுக்கு உப்பு தட்டுப்பாடு இல்லாமல் கிடைத்தாலும், சந்தையில் உப்பு விலை அதிகரிக்கப்படுவது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதிக இலாபம் ஈட்டும் நோக்கில் உப்பின் விலையை நியாயமற்ற முறையில் அதிகரிப்பதற்கு எவராவது முயற்சித்தால்,எதிர்காலத்தில் உப்பிற்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுத் தொடர்பில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இங்கு விளக்கமளித்தனர்.



## மதுபானசாலை அனுமதிப் பத்திரம் வழங்குவதாகக் கூறிப் பண மோசடி:

### வவுனியாவில் முன்னாள் ஈபிடிபி உறுப்பினர் கைது

மதுபானசாலை அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பில் பணம் பெற்றுக் கொண்டு காசோலை கொடுத்தமை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் ஈபிடிபியின் முன்னாள் உறுப்பினர் என்று வவுனியா நிதி மோசடி குற்றப் பிரிவுப் பொலிசார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

முன்னைய ஆட்சிக் காலத்தில் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் மதுபானசாலை அனுமதிப் பத்திரம் பெற்றுத் தருவதாக கூறி ஈபிடிபியின் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்இ முன்னாள் அபிவிருத்திக் குழுத்தலைவருமானகதிலீபன்அவர்களுடன் இணைந்து செயற்பட்ட ஈபிடிபி உறுப்பினர் ஒருவர் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் பணத்தினைப் பெற்றுள்ளார்.

அதற்கு பொறுப்பாகதனது காசோலையை அவர் வழங்கியிருந்தார். மதுபானசாலை

அனுமதிப் பத்திரம் கிடைக்காத நிலையில்இ குறித்த காசோலையை வங்கியில

வைப்பிட்டபோது அதில் பணம் இல்லை எனத் தெரிவித்து வங்கியால் திருப்பப்பட்டிருந்தது. இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்கள் வவுனியா பொலிஸாரின் நிதி மோசடி குற்றப் பிரிவில் செய்த முறைப்பாட்டையடுத்து முன்னாள் ஈபிடிபி உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவரை நீதிமன்ற உத்தரவுக்கமைய எதிர்வரும் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் - என்றனர்..

(100)

## சம்மாந்துறை பொலிஸார் அதிரடி பல மோ. சைக்கிள்கள் பறிமுதல்

(நில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குஉட்பட்ட பகுதியில் தலைக்கவசம் அணியாமல் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் மற்றும் போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் கீழ் சிலரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு அவர்களின் மோட்டார் சைக்கிளையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் பறிமுதல் செய்துள்ளனர்.



இச்சம்பவம் நேற்றுக் காலை வேளையில் நடைபெற்றுள்ளது. அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதான வீதியில் வைத்து இக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சில மோட்டார்சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்கள் உள்ளிட்ட சான்றுப் பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இன்றைய தினம் காலை வேளையில் மாத்திரம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 10 வீதி விபத்துக்கள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இச்சோதனை நடவடிக்கையில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஊழலை ஒழிக்காத ஊழல் ஒழிப்பு சட்டங்கள்

2023 ஆம் ஆண்டில் பெரிதும் பரப்புரை செய்யப்பட்டு, பல நாடாளுமன்ற விவாதங்களுக்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட ஊழல் ஒழிப்பு சட்டம் (Anti-Corruption Act) இன்று தனது இலக்கைத் தவற வைக்கும் பாதையில் நடக்கிறது. சர்வதேச நிதி நிறுவனங்களின் அழுத்தம் காரணமாக உருவாக்கப்பட்ட இந்தச்சட்டம், இலங்கையின் அரசியல் மற்றும் நிர்வாகத்திலுள்ள ஊழலை கட்டுப்படுத்தும் என்பதற்காக மக்களிடம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. ஆனால், 2025 இற்குள் அந்த எதிர்பார்ப்பு முற்றிலும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

சட்டப்படி, உயர் பதவிகளில் இருக்கும் அரச அதிகாரிகள், அமைச்சர்கள், மற்றும் வெளிநாட்டு முதலீட்டுகளுக்கான ஒப்பந்தங்களில் ஈடுபடும் நபர்கள் தங்கள் சொத்துக்கள் மற்றும் வருமானங்களைத் தகுந்த முறையில் அறிவிக்க வேண்டும். மேலும், அந்த விவரங்கள் பொதுமக்கள் பார்வைக்கு எளிதில் கிடைக்க வேண்டும் என்ற கோட்பாடு கூறப்படுகிறது. ஆனால், தற்போது அரச தரப்பிலோ, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிலோ, அந்த விவரங்களை வெளிப்படுத்தக் கவனம் செலுத்தப்படுவதில்லை.

மேலும், பல முக்கிய ஊழல் புகார்கள் தொடர்பான விசாரணைகள் தொடங்கப்பட்டு, சிலவற்றில் விசாரணைகள் நடந்து கொண்டிருந்தபோதும், அவை இன்று சட்ட ரீதியாக உருப்படியற்ற நிலையில் இருக்கின்றன. சில விசாரணைகள் அரசியலமைப்புச் சிக்கல்களால் தடைபட்டிருக்கின்றன என்றாலும், பெரும்பாலானவை அலட்சியத்தால் அல்லது திட்டமிட்ட அரசியல் தலையீடுகளால் நின்றுவிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், Transparency International மற்றும் Verité Research போன்ற நம்பகமான அமைப்புகள் வெளியிட்டுள்ள ஆய்வுகள், இந்தச் சட்டத்தின் செயல்பாட்டில் மிகுந்த குறைபாடுகள் இருப்பதை நமக்குக் கூறுகின்றன. குறிப்பாக, (Whistleblower Protection)என்ற உரிமை, சட்டத்தில் உள்ளதாகத் தெரிந்தாலும், நடைமுறைச் சூழலில் எந்தவித பாதுகாப்பும் கிடைக்கவில்லையென்றும், தகவல் தெரிவிப்பவர்கள் தண்டனையை சந்திக்கின்றனர் என்ற கவலை எழுகின்றது.

மக்கள்அறியவேண்டியமுக்கியமானவிடயம்என்னவென்றால், சட்டங்கள் இருப்பது முக்கியமல்ல – அது எவ்வாறு நடைமுறையில்நிறைவேற்றப்படுகிறது என்பதே முக்கியம். நீதிமன்றங்களில் பிணை மற்றும் தாமத வழக்குகள் ஊழலுக்கு எதிரான சட்டங்களை கேலி செய்யும் அளவிற்கு மருவியுள்ளன. இந்த நிலையில், மக்களின் நம்பிக்கையை மீட்பதற்கு சட்டவிரோதங்களைவிட, சட்டங்களை மீறி அமைந்துள்ள நிர்வாக ஒழுக்கமின்மையே மிகப்பெரும் எதிரி.

இந்த சட்டங்கள் பலமாக இருந்தாலும், அவற்றை செயல்படுத்துவதற்கான தன்னாட்சி வாய்ந்த நிறுவனங்கள் இல்லாமல் இருந்தால், சட்டங்கள் வெறும் ஆவணங்களாகவே இருந்து விடும். தற்போது, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவே தனது அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்துவதற்குத் தயங்குகின்ற நிலையிலும், அரசியல் தலைமை அதனை ஊக்கப்படுத்தும் எண்ணமின்றி செயல்படுவதும், மக்கள் நம்பிக்கையை முற்றிலும் சிதைக்கும்.

நாட்டின் பொருளாதாரம் மூழ்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், பன்னாட்டு நிதி ஆதரவுகள் மற்றும் முதலீடுகளுக்கான நம்பிக்கையை உருவாக்க, ஊழல் ஒழிப்பு என்பது ஆணைக்குழு மட்டுமல்ல – அரசியலமைப்பு நெறிமுறைகளின் முழுமையான செயலாக்கமாக இருக்க வேண்டும். இல்லையெனில், ஊழலை ஒழிக்கும் சட்டங்கள், உண்மையில் ஊழலை பாதுகாக்கும் காவல் சுவர்களாகவே விளங்கும் அபாயம் உள்ளே.

முடிவாக, அரசியல் வெற்றி பேசும் களத்தில் மட்டுமல்ல, செயல் களத்திலும் ஊழலை ஒழிக்க அரசாங்கம் நியாயமானே, நேர்மையான, பயப்படாத அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில், சட்டங்களை உருவாக்கும் நாடாக இல்லாமல், அவற்றை புறக்கணிக்கும் நாடாக நாம் பார்க்கப்படுவோம்.

### வெருகலம்பதியில் நேற்று

# எண்ணெய்க் காப்பு சாத்த அலைமோதிய பக்தர்கள்

(சகாதேவராஜா)

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களின் எல்லையில் மகாவலி நதி தீரத்திலே அமைந்துள்ள வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி முருகபெருமானுக்கு எண்ணெய்க்காப்பு சாத்த நேற்று(7) சனிக்கிழமை ஆயிரக்கணக்கான அடியார்கள் கியூ வரிசையில் அலைமோதினர்.

சுமார் 2 கிலோமீட்டர் தூரத்திற்கு கியூ வரிசை நீண்டிருந்தது.

காலையிலிருந்தே சுமார் ஐயாயிரம் அடியார்கள் கியூ வரிசையில் காத்து நின்றனர்.

காலை 7 மணிக்கு சென்ற ஒரு பக்தர் எண்ணெய்க்காப்பு சாத்த 13 மணியாகியது.

வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி முருகபெருமானுக்கும் கஜவல்லி மஹாவல்லி சமேத ஸ்ரீ சித்திர வேலாயுத முருகபெருமானுக்கும் ஏனைய பரிபாலன மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேகம் இன்று 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00மணியளவில் கோலாகலமாக இடம்பெறும்.








வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

## அனைத்துச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றஇலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் அரசியல்குழுக்கூட்டத்திலேயேமேற்குறிப்பிட்ட தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சி அண்மையில் நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வட, கிழக்கில் உள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் அதிகூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சி ஆட்சியமைப்பதற்கு ஏனைய கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்ற கோட்பாட்டைமுன்வைத்து,அதனடிப்படையில் ஏனைய கட்சிகளிடம் ஆதரவு கோரி பேச்சு நடத்தி வருகின்றது.

அதன் ஓரங்கமாக சில சபைகளில் நிர்வாகங்களைப்பகிர்ந்துகொள்வதுதொடர்பில் சில கட்சிகளுடன் இணக்கப்பாடுகளையும் எட்டியுள்ளது. இருப்பினும் மேற்குறிப்பிட்ட அடிப்படையில் ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிக்குமாறு கோரி தமிழ் அரசுக் கட்சியின் பதில் தவிசாளர் சிவஞானம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்திய சந்திப்பு கடும் விமர்சனங்களுக்கு உள்ளான நிலையிலேயே, வெள்ளிக்கிழமை இரவு இந்த நிகழ்நிலை முறைமையிலான சந்திப்பு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

இச்சந்திப்பில் உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைத்தலுக்கு அப்பால், டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்பு பற்றிக் கலந்துரையாடப்பட்டதாக அறியமுடிகின்ற போதிலும், அது பற்றிய விவரங்களை வெளியிடுவதற்கு கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்கள் மறுத்துவிட்டனர்.

## 323 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பத்துக்கமைய கொள்கலன்களை விடுவிப்பதற்கான எந்தவொரு அதிகாரமும் பிமல் ரத்நாயக்கவுக்கு இல்லை. தகவல்கள் வழங்கும் எம்மை முடக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றதே தவிர, உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்துவதற்கானஎந்தநடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையெனநாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொள்கலன் விவகாரம் தொடர்பில் இரண்டாவது முறையாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலமளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:,

சோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் எம்மால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாககுற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா இது தொடர்பில் புதிய விடயமொன்றைக் கூறியிருக்கின்றார். அவை குறித்து விசாரணைகளைமுன்னெடுப்பதற்குப்பதிலாக எம்மீது குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கின்றனர்.

சுங்க ஆணையாளரிடம் இது குறித்த தகவல்களைக் கோரிய போதிலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 5 (1) உறுப்புரைக்கமைய அந்தத் தகவல்களை வழங்கமுடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முழுமையாக இந்த விடயம் மூடி மறைக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் என்ன இருந்தது என்பதை ஆளும்தரப்பு வெளிப்படையாகக் கூறியிருந்தால் இந்த விடயம் சமூகத்தில் இவ்வாறு பேசுபொருளாகியிருக்காது.

ஆயிரக்கணக்கான கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியிருந்த நிலையில், இந்த 323 கொள்கலன்கள் மாத்திரம் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவிக்கப்பட்டது? துறைமுகத்தில் ஏற்பட்ட நெருக்கடி தொடர்பில் ஆராய்ந்துஅறிக்கைசமர்ப்பிப்பதற்குஅமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நியமிக்கபட்ட குழு இதுவரையில் அமைச்சரவையில் எந்தவொரு அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை.

இவ்வாறு தனது விருப்பத்துக்கமைய கொள்கலன்களை விடுவிப்பதற்கான எந்தவொருஅதிகாரமும்பிமல்ரத்நாயக்கவுக்கு இல்லை. துறைமுக அமைச்சருக்கு சுங்கத் திணைக்களத்தின் கீழுள்ள கொள்கலன்களை விடுவிப்பதற்கு அதிகாரமில்லை. தனக்கு வழங்கப்படாத அதிகாரத்தை பிமல் ரத்நாயக்க கையிலெடுத்து செயற்பட்டமையால் நாட்டுக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எனவே இவ்வாறான தீர்மானத்தை எடுத்த பிமல் ரத்நாயக்கவை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைத்து விசாரிக்க வேண்டும்.

தகவல்கள் வழங்கும் எம்மை முடக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றதே தவிர, உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்துவதற்கான எந்த நடவடிக்கைகளும்முன்னெடுக்கப்படவில்லை. எவ்வாறான சவால்களை எதிர்கொள்ள நேரிட்டாலும் இந்நாட்டில் நியாயத்துக்காக நாடாளுமன்றத்துக்குள்ளும் அதற்கு வெளியிலும் போராடுவோம் என்றார்.

## தாய் நாட்டைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றதா? அல்லது அமைச்சரவை அனுமதி கிடைத்ததா? அவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டனவா என்பது தொடர்பில் நாம் தொடர்ச்சியாகக் கேள்விகளை முன்வைத்தோம்.

கடந்த வாரம் பிரதமரிடம் இது குறித்து கேள்வியெழுப்பினோம். ஆனால் பிரதமருக்கு பதிலாக சபை முதல்வர் எழுந்து தம்வசம் தகவல்கள் இல்லை என்றும், அதற்கு சற்று கால அவகாசம் வேண்டும் என்றும் கூறினார்.

நாட்டில் பரவலான பேசுபொருளாக அமைந்த இந்த விவகாரம் தொடர்பில் தம்மிடம் தகவல் இல்லை என சபை முதல்வர் கூறுவது புதுமையாகவுள்ளது. பிரிதொரு நாட்டுடன் செய்து கொள்ளப்படும் புரிந்துணர்வுஒப்பந்தங்கள்தொடர்பில்கேள்வி எழுப்பினாலும், எழுப்பாவிட்டாலும் அவை தொடர்பான புரிதல்கள் அமைச்சர்களிடம் இருக்கவேண்டும்.

தகவல்அறியும்உரிமைசட்டத்தின் ஊடாக இந்த ஒப்பந்தங்களின் பிரதிகளை ஜனாதிபதி செயலகத்திடம்கோரியபோது, தம்வசம்அவை இல்லைஎன்றபதிலேவழங்கப்பட்டது. எதற்காக இது குறித்த தகவல்கள் மறைக்கப்படுகின்றன? எமது கேள்விக்கு பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம் இருந்தும் பிரதமர் ஏன் அதனை புறக்கணிக்கின்றார்? அவ்வாறெனில் ஆளும்தரப்பு செய்யக் கூடாத ஒன்றை செய்துள்ளதா? தெரிந்தோதெரியாமலோ எமது தாய் நாடு காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா?

நாடாளுமன்றத்தில் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்து, அவை குறித்த விவாதங்களை நிறைவுக்கு கொண்டு வர முடியுமல்லவா? ஆனால் அதற்கானதைரியம்ஆளும்தரப்புக்குஇல்லை. நாடாளுமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் நாம் இது குறித்துகேள்வியெழுப்பி இருக்கின்றோம்.

நாடாளுமன்றத்தில் மாத்திரமின்றி பொது மக்களும் இது தொடர்பில் கேள்வியெழுப்புகின்றனர் என்பதை ஆளும்தரப்புஅறியும். மறைக்கக்கூடியவாறான உள்ளடக்கங்கள் இந்த ஒப்பந்தங்களில் காணப்படுகின்றமை கவலைக்குரியதாகும்.

323 கொள்கலன்கள் விவகாரத்திலும் ஆளும்தரப்பு இவ்வாறுதான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அனைத்துவிடயங்களிலும் தலையிடும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த விடயத்தில்அமைதியாகவுள்ளார். அறிக்கையை தயாரித்துக் கொண்டிருப்பதாகவும், அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை காத்திருக்குமாறும் கூறுகின்றனர். ஆனால் அந்த அறிக்கையை தயாரிப்பதுசுயாதீனகுழுஅல்ல. அமைச்சர்களே அக்குழுவில் உள்ளனர். அவர்கள் தமக்கு ஏற்றாற்போலஅதனைத்தயாரித்துக்கொள்வர். எனவே அதில் கூறப்படும் விடயங்களை முழுமையாக ஏற்க முடியாது என்றார்.






# சிந்துப்பாத்தி புதைகுழியிலிருந்து 19 பேரின் எலும்பு எச்சங்கள் மீட்பு



















# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.06.2025இல் வெளியிடப்பெற்றது